தமிழர்களின் இதயத் துடிப்பு

# குமுதம்

ர் 1 தமிழ் வார இதழ்

₹ 30 (தமிழ்நாடு, புதுச்சேரி)
₹ 35 (மற்ற மாநிலங்களில்)

1.11.2023



## பெண்கள் சிறப்பிதழ்

**பெண்களின் துயரங்களை அறிந்தவன் நான்!**

வைரமுத்து பர்சனல் பக்கங்கள்

தீபாவளி சிறப்பிதழ்! 2 புத்தகங்கள்

**"என் படங்களில் மக்களுக்கான அரசியல் இருக்கும்!"**

ராஜுமுருகன் Exclusive

இளையரவி

# கவனிக்கப்பட வேண்டிய

# கல்கிகள்!

## பங்கு சந்தையில் பட்டயகிளப்பும் பெண் கோடீஸ்வரிகள்...





நம்ம ஊரில் சுயமாக சம்பாதித்து கோடீஸ்வரிகளாக இருக்கும் பெண்கள் லிஸ்டை எடுத்தால் அவர்களில் பெரும்பாலானவர்கள் நடிகைகளாகத் தான் இருப்பார்கள். காரணம் அவர்கள் சார்ந்திருக்கும் திரைத் துறையில் அதற்கான வாய்ப்பு வசதிகள் அதிகம். உண்மையில் அவர்கள் திறமையானவர்களாக இருந்தாலும் அதில் அவர்களின் அழகுக்கும் அதிர்ஷ்டத்துக்கும் பெரும் பங்கு இருக்கும்.

அப்படி இல்லாமல் அறிவு, படிப்பு, திறமை, உழைப்பு என இதை மட்டுமேமூலதனமாகக் கொண்டு கோடீஸ்வரிகளான பெண்களும் இருக்கின்றனர். சிறு முதலீட்டில் துவங்கி, ஹைடெக்காக சிந்தித்து

**கருத்து வேறுபாடு காரணமாக வாழ்க்கையிலும் தொழிலும் இருவரும் பிரிய நிறுவனத்தின் தன்னுடைய பங்குகள் அனைத்தையும் அவரிடமே தந்துவிட்டு அதில் வந்த பெருந்தொகையுடன் தானே ஒரு நிறுவனத்தை தொடங்கி நடத்தி வருகிறார் அம்பிகா.**



கார்பரேட் லெவலுக்கு, உயர்ந்த பெண்கள் இந்தியா விலேயே ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்களில் முக்கியமான சிலரைப் பற்றி முதலீடு, மற்றும் பொருளாதார ஆலோசகர் எஸ். சுப்பிரமணியம் அவர்களிடம் கேட்டோம்....

"முதல்ல நம்ம ஊர்ல இருந்து ஆரம்பிப்போம்... தங்களைத் தாங்களே கோடீஸ்வரிகளாக செதுக்கிக் கொண்ட, ஆனால் கவனிக்கப்படாத கல்கிகளில் முக்கியமானவர் சோஹோ கார்பரேட் நிறுவனர் ஸ்ரீதர் வேம்புவின் சகோதரி **ராதா வேம்பு.** சென்னை உயர் நீதிமன்றத்தில் ஸ்டெனோகிராஃபராக பணியாற்றிய எளிய தந்தைக்கு மகளாகப்பிறந்து, ஐ.ஐ.டி.யில் படிக்கும் பொழுதே தன் சகோதரர்ஸ்ரீதர் வேம்பு உடன் சிறிய நிறுவனத்தை துவங்கிபடிப்படியாக உயர்ந்தவர் ராதா வேம்பு. இன்று அவர் சொத்து மதிப்பு சுமார் 22 ஆயிரம் கோடி. உலகத்தின் 1176வது பணக்காரர். அமெரிக்காவின் ஆஸ்டின் நகரத்தை தலைமை யிடமாகக் கொண்டுஇயங்கும் இவரது சோகோ மெயில் நிறுனம்ஒன்பது நாடுகளில் இயங்கி வருகிறது. இது தவிர அவரது பல நிறுவனங்கள் பங்குச் சந்தையில் பிரமாதமாக பெர்ஃபார்ம் பண்ணி வந்தாலும், 'அரசியல் வாதியோட பொண்டாட்டி கவுன்சிலர் ஆன கதையாய்'பலரும்இவரது சகோதரரை பற்றித்தான்அதிகம் பேசுகிறார்களேதவிர, இவர் எந்த ஆர்பாட்டமும் இல்லாமல் ஊடக வெளிச்சத்திலிருந்து ஒதுங்கியே வாழ்கிறார்.

இவரைப்போல் ஊடக வெளிச்சத்தில் இருந்து ஒதுங்கி நின்று சாதிக்கும் மற்றொரு தமிழ் பெண் **அம்பிகா சுப்பிரமணியன்.** 1990களில் அண்ணா யுனிவர்சிட்டியில் எலெக்ட்ரிக்கல் என்ஜினியரிங் படித்து விட்டு அமெரிக்கா போய் கம்ப்யூட்டர் என்ஜினியரிங் படித்துவிட்டு மோட்டோரோலா கம்பெனியில் எட்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். அண்ணா யுனிவர்சிட்டியில் படிக்கும் பொழுது நண்பரான தீரஜ் ராஜாராம்என்பவரைதிருமணம் செய்து கொண்டு இருவரும் சேர்ந்து ஒரு டேட்டா அனலிட்டிக்ஸ் நிறுவனத்தை தொடங்கினர். பின்னர் கருத்து வேறுபாடு காரணமாக வாழ்க்கையிலும் தொழிலும் இருவரும் பிரிய நிறுவனத்தின் தன்னுடைய பங்குகள் அனைத்தையும் அவரிடமே தந்துவிட்டு அதில் வந்த பெருந்தொகையுடன் தானே ஒரு நிறுவனத்தை தொடங்கி நடத்தி வருகிறார் அம்பிகா. இப்போது பங்குச் சந்தையில் அதன் மதிப்பு சுமார் 8200 கோடி. அதுமட்டுமல்ல உலகின் இளம் வயது கோடீஸ்வர பெண் தொழில் முனைவோர் என்ற கௌரவத்தையும் அம்பிகா பெற்றிருக்கிறார்.

இவர்கள் எல்லாம் கவனிக்கப் படாத கல்கிகள் என்றால் பலரது கவனத்தையும் ஈர்த்தாலும் தன் சாதனை களுக்கெல்லாம்தன் அப்பாவின் பின்னணிதான் காரணம் என்று கருதப்பட்டு தன் சொந்த சாதனைகளை கூட சொல்ல முடியாத நிலையில் இருப்பவர்



**தன்னைத் தானே பெரும் கோடீஸ்வரியாக செதுக்கிக் கொண்டுள்ள ஃபல்குனிநாயரின் சொத்து மதிப்பு 60 ஆயிரம் கோடி.**



**பங்கு வர்த்தகத்தில், பங்குச் சந்தை முதலீட்டில் முர்மு பாயும் புலி என்பது பலருக்குத் தெரியாது.**

**ரோஷிணிநாடார்.** கம்யூட்டர் தொழில் நுட்பத்தில் தலை சிறந்த நிறுவனமான ஐ.பி.எம்.மின் 7 கிளை நிறுவனங்களை13,740 கோடி ரூபாய் கொடுத்துவாங்கி, தன் சொந்த நிறுவனமான ஹெச்.சி.எல். நிறுவனத்தின் மதிப்பை பல மடங்கு உயரச்செய்தவர். இவரதுநிர்வாகத் திறன்மற்றும் புத்திசாலிதனத்திற்கு பல உதாரணங்களை சொல்ல லாம். ஆனால் அவர் எதையும் சொல்வதில்லை. அப்படி அவர் சொல்லாததில் முக்கியமானது சுமார் 85,000 கோடிரூமாய்மதிப்பிலான அவரது சொத்து மதிப்பு. அதைவிட மதிப்பு மிக்கது அவரது நிர்வாகத்தின் கீழ் தந்தை ஷிவ் நாடாரின் தொழில் சாம்ராஜ்யம் விரிவடைந்ததும் வலிமை அடைந்ததும் மதிப்பு மிக்கதாக மாறியதும் தான்.

அழகுக் கலையை தங்கள் வாழ்வாதாரமாக எளிய பெண்கள் பலர் கொண்டிருக்கும் நேரத்தில் அழகு சாதங்களின் நிறுவனம் ஒன்றை துவக்கி உலகின் பெரும் கோடீஸ்வரிகளில் ஒருவர் ஆனவர் **ஃபல்குனிநாயர்.** அவரது நய்கா நிறுனத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எல்லாம் போட்டி போட்டு கொண்டு முதலீடு செய்கிறார்கள் என்பதே அவர் வெற்றியின் அடையாளம். அவர் நிறுவனத்தின் மொத்த பங்குகளில் பத்து சதவிகிதம் வெளிநாட்டு முத்லீட்டாளர்களுடையது என்பது சாதாரண விஷயமில்லை. தன்னைத் தானே பெரும் கோடீஸ்வரியாக செதுக்கிக் கொண்டுள்ள இந்த பெண்மணியின் சொத்து மதிப்பு 60 ஆயிரம் கோடி. வயதுக்கு ஆயிரம் கோடி சம்பாதித்திருக்கிறார்...

ஆணோ, பெண்ணோ உழைத்தால் உயரலாம். புத்திசாலி யாக இருந்தால் சிகரங்களைத் தொடலாம் என்பதற்கு இவர்கள் சாட்சி... பெண்கள் பொருளாதாரத்தில் புலி என்பதற்கு நம் நாட்டின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனே ஒரு உதாரணம். ஆனால் அவருக்கு இணையானவர் நம்ம ஜனாதிபதி **திரௌபதி முர்மு** என்றால் நம்பமுடிகிறதா? பங்கு வர்த்தகத்தில், பங்குச் சந்தை முதலீட்டில் முர்மு பாயும் புலி என்பது பலருக்குத் தெரியாது. இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்களான கோல் இந்தியா, கொச்சின் ஷிப் யார்டு, என்.டி.பி.சி., டி.ஆர்.டி.ஓ. என பலவற்றில் இவரின் புத்திசாலித் தனமான முதலீடுகளே அதற்கு சாட்சி. அவரின் சமூகம் சார்ந்து பேசப்படும் அளவிற்கு அவரின் சாதனைகள் பேசப்படுவதில்லை என்பது வருத்தத்திற்குரியது.



**எஸ். சுப்பிரமணியம்**

நடந்து முடிந்த ஜி.20. மாநாட்டின் போது, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியம் காரணம் பெண் தொழில் முனைவோர்கள் தான் என்று பிரதமர் மோடி சொன்னது வெறும் அலங்கார வார்த்தைகள் அல்ல, அப்பட்டமான உண்மை. பங்கு சந்தையில் முதலீடு செய்து பணத்தை இழந்தவர்கள் என்று பல கதைகள் மீடியாவில் வரும்... ஆனால் அதில் ஒருவர்கூட பெண்களாக இருக்க மாட்டார்கள். காரணம் அவர்கள் முதலீடு செய்வதில்லை என்பதல்ல... அவர்களின் முதலீடுகள் புத்திசாலித்தனமாக, பக்குவமாக இருக்கும் என்பது தான். செபியின் ஆய்வுப்படி பங்குசந்தை முதலீட்டில் பத்தில் ஒரு ஆண்தான் வெற்றி பெறுகிறார். ஆனால் பத்தில் எட்டு பெண்கள் வெற்றி பெறுகிறார்கள். இது தெரியாமல் ஏலச் சீட்டு நிறுவனத்திடம் ஏமாறும் அப்பாவிகளாக மட்டுமே நாம் அவர்களை நினைப்பது நமது அறியாமை. இந்தியப் பொருளாதாரத்தின் அஸ்திவாரம் மட்டுமல்ல சிகரமும் பெண்கள் தான். ஒரு குடும்பத்தில் ஆணும் பெண்ணும் சம்பாதிப்பவர்களாக இருந்தால் அந்தக் குடும்பம் பொருளாதார ரீதியாக எந்த அளவு பாதுகாப்பானதாக இருக்கிறது, மேலும் வளர்கிறது என்பது நாம் கண்கூடாக பார்க்கும் உண்மை. ●


தமிழர்களின் இதயத் துடிப்பு
குமுதம்
ம்பர் 1 தமிழ் வார இதழ்
தீபாவளி சிறப்பிதழ் 1
2
புத்தகங்கள்
குமுதம்
1.11.2023
கலகல
ஸ்பெஷல்
இசைஞானிக்காக
கங்கை அமரனை
காக்கா புடிச்சேன்!
ராமராஜன் கலக்கல்
என்னை
சுத்தி
இருக்கறவங்களை
நேசிக்கணும்!
ஷ்ரத்தா ஸ்ரீநாத் பளிச்